Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# யாழ். மாவட்டத்தில் ‘ஜனசவிய’ நிறுத்தம்

யாழ். மாவட்டத்தில் நடைமுறையில் இருந்த ''ஜ ன ச வி ய'' திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. மேற்படி திட்டத்தை நிறுத்திக்கொண்ட விடயம் யாழ். செயலகத்துக்கு நீண்ட நாட்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் தெரிய வந்தது. இதனால் இத்திட்டம் நேற்று வரை குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இதனால் பல லட்சம்ரூபா பணத்தை மேற்படி திட்டத்தின் கீழ் உள்ள குடும்பங்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை (4ஆம்பக்கம் பார்க்க)

ஈழநாதம்
EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி
...கம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    வைகாசி 19    [01-06-93]    செவ்வாய்க்கிழமை    ஓசை 103

# நொச்சிமோட்டையில் உக்கிர சண்டை; பல புளொட்டும், படையினரும் பலி

## இராணுவ நடவடிக்கையில் பின்னடைவு இல்லை

### இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)
...ணுவம் எந்தப் பின்ன ...களுமின்றி தமது நடவ ...களைத் தொடர்ந்து ...ாண்டு வருவதாகவும, ...லைப் புலிகளை பலவீ ...படுத்துவதே இராணுவ ...வடிக்கைகளின் நோக்கம் ... இராணுவப் பேச்சா ...சேடியர் நளின் அங் கமன தெரிவித்தார்.

முன்னதாக ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தின் பின்னரும் இராணுவ நடவடிக்கையில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் தொடர்ந்து இராணுவ நடவடிக்கை இடம் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டமை தெரிந்ததே.

## ...னம்விட்டுப் பேசினால் ...ச்சினைக்கு தீர்வு வரும்

### கெனத் பெர்னான்டோ தெரிவிப்பு

(...ருக்கோணமலை)
... விட்டுப் பேசினால் ...த்திலும் தீர்வுகாண ... புலிகளுடன் பேச்சு ...த்தையினை மேற் ...டு அமைதி வாழ்விற் ...கதவுகளைத் திறந்துவிட ...யும் என இன்னமும் நான் உறுதியாக நம்புகிறேன்'' என ...ங்கிலிக்கன் ஆயர் வண. ...கனத் பெர்னான்டோ தெரி...வித்தார்.

திருமலைக் கடற்படைத்தள வீதியிலுள்ள அங்கிலிக்கன் ...த்தில் நடை பெற்ற ...ச்சியில் கலந்து ...பேசிய கெனத் பெர்னான்டோ மேற்படி தெரிவித்தார்.

''அங்கு நாம் மிகவும் பண்பாகவே நடத்தப்பட்டோம். மனம் விட்டுப் பேசினால் எந்த விடயத்தில்தான் தீர்வு காண முடியாது? எனவேதான் சமாதானத்திற்கான தீர்விற்கு உதவவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துகின்றோம் புலிகளுடனான எமது பேச்சுக்கள் வெற்றியளித்தால் இரு இன மக்களும் பெருமகிழ்ச்சியடைவர்'' எனவும் ஆயர் கெனத் பெர்னான்டோ தெரிவித்தார்.

## ‘பயங்கரவாத’மே

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை புதன்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3.00 மணி தொடக்கம் 4.00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### கிளாலி – பூநகரி

## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கொழும்பு திரும்புகிறார்

[யாழ்ப்பாணம்]
செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

## $2\frac{1}{2}$ மணி நேரம் தொடர்ந்து மோதல்

(கொழும்பு)

வவுனியா - நொச்சிமோட்டையில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் - இராணுவம், புளொட் ஆகியோருக்கும் இடையில் கடும்மோதல்கள் இடம்பெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி. பி. சி. நேற்றிரவு அறிவித்தது. சுமார் இரண்டரை மணி நேரம் இடம்பெற்ற மோதலில் புளொட் குழுவைச் சேர்ந்த மூவரும், ஓர் இராணுவச் சிப்பாயும் மேலும் பலரும் கொல்லப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் ஆரம்பமாகிய இம் மோதல், சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நீடித்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புளொட் குழுவினரின் பதுங்கு குழிகள்மீது இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் இம் மோதலின் போது விடுதலைப்புலிகள் மோட்டார்ஷெல் மற்றும் நவீன ரகத்துப்பாக்கிகளையும் பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்புப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதலில் ஒரு புளொட் குழு உறுப்பினரும் ஓர் இராணுவச் சிப்பாயும் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வவுனியா-நொச்சிமோட்டையில்

## ஒன்பது பயணிகளும் மோதலின்போது பலி

[யாழ்ப்பாணம்]
வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்று காலை நடைபெற்ற மோதல் சம்பவத்தில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூட்டுப் படைத் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

... பெண்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் மேலும் 31 பொதுமக்கள் காயமடைந்ததாகவும் இவர்கள் வவுனியா, ...ளில் அனுமதிக்கப்பட்டதாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

படுகாயமடைந்தவர்கள் 18 பேரே அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகி...

## புதியதிட்டம்

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஏழு மாகாண முதலமைச்சர்களுக்கும் பூரணமான பாதுகாப்புவழங்கப்படும் என்... இதற்காக புதிய பாது... பாதுகாப்... ரித்து வருகி... விக்கப்பட்டுள்ள...

### நாளைய தினம குமாரி வரும்

யாழ். குடா நாட்டிற்கு ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு குமாரி கப்பல் நாளை பருத்தித் துறை வந்தடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும் எதிர்வரும் 15ஆம் திகதியளவில் குமண கப்பல் கொழும்பில் இருந்து புறப்...

## மனம்விட்டுப் பேசினால் பிரச்சினைக்கு தீர்வு வரும்

கெனத் பெர்னான்டோ தெரிவிப்பு

(திருக்கோணமலை)

... விட்டுப் பேசினால் ...த்திலும் தீர்வுகாண ... புலிகளுடன் பேச்சு ...த்தையினை மேற் ...டு அமைதி வாழ்விற் ...கதவுகளைத் திறந்துவிட முடியும் என இன்னமும் நான் உறுதியாக நம்புகிறேன்'' என ...ங்கிலிக்கன் ஆயர் வண. கெனத் பெர்னான்டோ தெரிவித்தார்.

திருமலைக் கடற்படைத்தள வீதியிலுள்ள அங்கிலிக்கன் ...த்தில் நடைபெற்ற ...ம்...சியில் கலந்து ... பேசிய கெனத் பெர்னான்டோ மேற்படி தெரிவித்தார்.

''அங்கு நாம் மிகவும் பண்பாகவே நடத்தப்பட்டோம். மனம் விட்டுப் பேசினால் எந்த விடயத்தில்தான் தீர்வு காண முடியாது? எனவேதான் சமாதானத்திற்கான தீர்விற்கு உதவவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துகின்றோம் புலிகளுடனான எமது பேச்சுக்கள் வெற்றியளித்தால் இரு இன மக்களும் பெருமகிழ்ச்சியடைவர்'' எனவும் ஆயர் கெனத் பெர்னான்டோ தெரிவித்தார்.

## 'பயங்கரவாத'மே அபிவிருத்திக்குத் தடை

டி. பி. விஜயதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

...குக் கிழக்கில் நிலவும் ...கரவாதம்'' இந்நாட்டு ...ளாதாரத்திற்கு ஒரு முக் ...டையாக இப்போது ...ின்றது என ஜனாதிபதி டி. பி விஜயதுங்கா தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் சிறிலங்காவிற்கான வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான கலந்துரையாடலில் பேசிய ஜனாதிபதி விஜயதுங்கா சமாதானம் மீண்டும் நிலைநாட்டப்பட்டதும் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான வெளிநாட்டு உதவியை வழங்க

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கடவுச் சீட்டு கட்டணம் ...00 ரூபாவாக அதிகரிப்பு

[கொழும்பு]

...வுச் சீட்டை ஒரு நாளில் ...வதற்கான கட்டணம் ...க்கப்பட்டுள்ளது ஒரு ... அனைத்து நாடுகளுக் ... கடவுச்சீட்டை வழங்க ...பாவும். மத்திய கிழக் ... கடவுச் சீட்டை வழ ...0 ...வும் அறவிடப் ...குடிவரவு குடிய ...ட்டுப்பாட்டாளர் அறி...ளார்

...று செவ்வாய் முதல் ... கட்டணங்கள் நடை...க்கு வரும். இதே சமயம் கடவுச் சீட்டை ஒரு ஆண்டுக்கு புதிப்பிக்க 100 ரூபா கட்டணமாகவும் 5 ஆண்டுகள் நீடிக்க 500 ரூபா கட்டணமாகவும் அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடவுச் சீட்டுகள் தற்போது கம்பியூட்டர் முறையில் தயாரிக்கப்படுவதால் செலவினத்தைஈடுசெய்யவே கட்டண அதிகரிப்பு அமுல் செய்யப்படுவதாக குடிவரவு குடியகல்வு அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## ஆயுதக் களைவினால் தமிழ்க்குழுக்கள் கவலை

(கொழும்பு)

...ழும்பிலுள்ள தமிழ்க் ...களிடமிருந்து ஆயுதங் ...க் களைவது தொடர் ...சிறிலங்கா அரசாங்கம் ...கொண்டிருக்கும் முடிவி... பல தமிழ்க் குழுக்களும் ... கொண்டிருப்பதாகக் ...து. ஈ.பி.டி.பி. ... இருக்கும் ஆயு...ங் களையுமாறு அர...பாதுகாப்பு அமைச்சுக்கு பணித்திருந்தமை தெரிந்ததே. இதனையடுத்து ஈ.பி.டி. பியின் ஆயுதங்களை களையும் நடவடிக்கையில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறுகையில்,ஈ.பி.டி.பி. உட்பட தமிழ்க் குழுக்கள் அனைத்திடமிருந்தும் ஆயுதங்களைக் களைவதன் நோக்கம் சிறிலங்கா பாதுகாப்பு படையினைச் சேராத எவரும் ஆயுதங்களுடன் திரிவதைக் கட்டுப்படுத்துவதாகும் எனத் தெரிவித்தார்.

அவ் அதிகாரி மேலும் கூறுகையில் அரசியல் வாதிகளின் மெய்ப்பாதுகாவலர்கள் கூட அரசியல் வாதிகளுடன் அரசாங்க நிறுவனங்களுக்கு விஜயம் செய்யும்போது ஆயுதங்களை எடுத்துச் செல்ல

( 4 ஆம் பக்கம் பார்க்க )

பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கொழும்பு திரும்புகிறார்

[யாழ்ப்பாணம்]

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வீரச்சாவு



லெப். ரவிக்குமார்

(யாழ்ப்பாணம்)

கறுக்காய்ப்பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் லெப்டினன்ட் ரவிக்குமார்(சிவகுருசிவராஜா, 10ஆம் வட்டாரம் கொக்கட்டிச்சோலை)எனும் விடுதலைப் புலிகள் போராளி வீரசாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புளொட் குழுவினரின் ... மற்றும் நவீன ரகத்துப்பாக்கிகளையும் பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்... விக்கின்றன.

இம்மோதலில் ஒரு புளொட் குழு உறுப்பினரும் ஓர் இரா...

### வவுனியா-நொச்சிமோட்டையில்

# ஒன்பது பயணிகளும் மோதலின்போது பலி

[யாழ்ப்பாணம்]

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்று காலை நடைபெற்ற மோதல் சம்பவத்தில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூட்டுப் படைத் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

பலியானவர்களில் மூவர் பெண்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் மேலும் 31 பொதுமக்கள் காயமடைந்ததாகவும் இவர்கள் வவுனியா, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

படுகாயமடைந்தவர்கள் 18 பேரே அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஏழு மாகாண முதலமைச்சர்களுக்கும் பூரணமான பாதுகாப்புவழங்கப்படும் ... பாது... பாதுகாப்... ரித்து வரு... விக்கப்பட்டுள்...

### நாளைய தினம் குமாரி வரும்

யாழ். குடா நாட்டிற்கு ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு குமாரி கப்பல் நாளை பருத்தித்துறை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் எதிர்வரும் 15ஆம் திகதியளவில் குமண கப்பல் கொழும்பில் இருந்து புறப்படும் என தெரியவருகிறது.

# திருமலையில் புலிகள் அதிரடி; ஆறு இராணுவத்தினர் பலி

### புலிகள் தரப்பில் சேதமில்லை

[திருக்கோணமலை]

திருமலை மாவட்டம் அல்லைக்கந்தளாய் பாலத்தடியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியாகினர்.

காலை 8 40 மணியளவில் அல்லைக் கந்தளாய் பாலத்தடி முகாமிலிருந்து வீதித் தடைகளை அகற்றியவாறு 200யார் தூரம் முன்னேறி வந்த இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடாத்தினர்.

ஏழு நிமிடநேரம் மட்டுமே நடந்த இம்மோதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை'

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

திருமலை மாவட்டம் அல்லைக்கந்தளாய் பாலத்தடி முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

| | | |
|---|---|---|
| ★ ஏ கே எல். எம். ஜி. | — | 01 |
| ★ ரி-56 -1 ரக துப்பாக்கி | — | 02 |
| ★ ரி-56 -2 ரக துப்பாக்கி | — | 02 |
| ★ ரி-56 பட்மொடல் துப்பாக்கி | — | 01 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. லிங் | — | 275 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 611 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. ரம்மகசின் | — | 01 |
| ★ ஏ. கே. ரவைக்கூடு | — | 20 |
| ★ ஜே. ஆர். கைக்குண்டு | — | 03 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. கிற்பாக் | — | 01 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 05 |
| ★ சப்பாத்து (சோடி) | — | [illegible] |
| ★ தொப்பி | — | 02 |

## எறிகணை வீச்சு

[தென்மராட்சி]

கிளாலி, அல்லிப்பளை கடற்கரை ஓரங்களை நோக்கி பூநகரி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் கடும் எறிகணைத் தாக்குதலை நடத்தினர் இவ் எறிகணைகள் கடற்கரையோரப்பகுதிகளில்பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன. இதன் சேதவிபரம் தெரியவில்லை. [86]

## படைத்தளபதி உதவியாளர் கடத்தப்பட்டு விடுதலை

(கொழும்பு)

படைத்தளபதி ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பணியாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவர் பஜிரோ ஜீப்பில் வந்த இனந்தெரியாத நால்வரால் கடத்திச் செல்லப்பட்டு மூன்று நாட்களின்பின் கொழும்பிலிருந்து 25 மைல் தொலைவில் விடப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

குறிப்பிட்ட அந்த அதிகாரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மர்ம விமானங்கள் நியூசிலாந்தினுடையதாம்

(கொழும்பு)

அம்பாறைக்கு மேலாக அண்மையில் பறந்த மர்மவிமானங்கள் நியூசிலாந்து நாட்டின் இராணுவ விமானங்கள் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கடந்தசனியன்று அம்பாறை வான் பரப்பில் மூன்று மர்ம விமானங்கள் பறந்ததும், இது குறித்து உயர்மட்டவிசாரணை ஒன்றை விமானப்படை ஆரம்பித்ததும் தெரிந்ததே.

முதலில் இந்த மர்ம விமானங்கள் மூன்றும் இந்திய விமானப்படைக்குச் சொந்தமானது எனக் கூறப்பட்டபோதிலும் இதுவரைமேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து இவை நியூசிலாந்து இராணுவ விமானங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விமானங்கள் வேண்டுமென்றே அம்பாறைவான்பரப்பினுள் வந்தனவா அல்லது இவை தற்செயலாக அப்பகுதியைக் கடந்து சென்றனவா? என்பது குறித்தே தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பாதுகாப்பு அதிகாரி மாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் சிறப்பு பாதுகாப்புப் பிரிவுக்கான பணிப்பாளர் நாயகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் பாதுகாப்பு பிரிவுக்கான பணிப்பாளர் நாயகமாக பிரதி பொலிஸ் சுப்பிரின்டன்ற் மகிந்த பாலசூரிய புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்பாக இப் பதவியை வகித்துவந்த ஆர். எம். பெஞ்சமின் மாத்தளைப் பிராந்தியத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

## வரி விளம்பரம்

**கார் கசற் றேடியோக்களா?**

**கடிகாரங்களா?**

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6584)

**S.L.A.S**

யூலை 93இல் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புகள் புதன், வெள்ளி நாட்களில் ஆரம்பம் 02.06.93 3.00 மணி முழுக்கட்டணம் 300/- School of Business Administration 16, 3rd Cross St Jaffna. (சி-6728)

**விபுலாநந்தர்**

இன்றும் கேட்கும் குரல் விபுலாநந்தர். விபுலாநந்த அடிகளின் நூற்றாண்டு நினைவு வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-6716)

**ஆண்டுவிழாவும்**

**விளையாட்டு போட்டியும்**

(பருத்தித்துறை)

தும்பளை கிழக்குசனசமூக நிலையத்தின் 45 வது ஆண்டு நிறைவு விழாவும், தும்பளை சிறுமலர்கள் பாலர் பாடசாலையின் 13-வது வருடாந்த விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய மைதானத்தில் திரு. அ. இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. சி. முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார் (25)

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின்
**உணவுப் பார்சல்கள்**
காலை 11.30 மணி முதல் பகல் 3.00 மணி வரை கிடைக்கும்.
மீன் / இறைச்சி ரூபா 30/-
மரக்கறி ரூபா25/-
மாணவர்களுக்கு விசேட சலுகை
எல்லாவிதமான உணவு ஓடர்களும் கவனிக்கப்படும்.
**ஜெசித்தாரா**
சுண்டுக்குளிமகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுகுளி
[சி-6718]


### ஆளுநருக்கு பாதுகாப்பு

தென்மாகாண ஆளுநர் பாக்கீர் மார்க்காரின் காலி கோட்டையிலுள்ள அலுவலகத்திற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆளுநரின் கோட்டை வாசஸ்தலத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.


## முக்கிய அறிவித்தல்

**மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

1993ஆம் ஆண்டு முதலாம் காலாண்டிற்கான வாக்காளர் பட்டியல் கிளை ரீதியாக மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள தலைமைக் காரியாலயத்திலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிவாரணக் கிளைகளிலும் அங்கத்தவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ் வாக்காளர் பட்டியலில் காட்சிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து பத்து நாட்களுக்கிடையில் பின்வருவனவற்றிற்கு எழுத்துமூலம் ஆட்சேபனை தெரிவிக்கலாம்.

1. காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் தனது பெயர் பதிவதற்கு தகுதி பெற்றிருந்தும், எவரேனும் தமது பெயர் சேர்க்கப்படாத பட்சத்தில் தனது பெயரைச் சேர்த்தல் பொருட்டு மேன்முறையீடு செய்யலாம்.
2. இவ் வாக்காளர் பட்டியலில் ஏதேனும் ஒரு பெயர் காணப்படுவது பற்றிய தமது ஆட்சேபனையை தெரிவிக்கலாம்.

இவ் ஆட்சேபனைகளை 10.06.1993 க்கு முன்னர்

[illegible] ...யலாளர்" தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், [illegible] ...தடி விநாயகர் கோவிலடி, மானிப்பாய் என்ற முகவரிக்கு [illegible] எழுத்துமூலம் அறிவிக்கும்படி இத்தால் கேட்கப்படுகின்றீர்கள்.

| நிவாரணக் கிளையின் பெயர் | அங்கத்தவர் பட்டியல் தயாரிக்கப்பட்ட கிளைகளின் பெயரும் முகவரியும் |
|---|---|
| 1. அ. சித்தன்கேணி, ஆ. தாவடி | கிளை இல. 4 விராங்கொடை |
| | ,, 5 பன்னாலை |
| | ,, 6 விழிசிட்டி |
| | ,, 12 மாவிட்டபுரம் |
| | ,, 13 அரசடி வீதி, மாவிட்டபுரம் |
| | ,, 14 கொல்லங்கலட்டி |
| | ,, 35 கலட்டி |
| | ,, 41 கிழானை |



## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்மடியில்
1-3-1971

தாயகமண்ணில்
1-6-1989

**நாகரெத்தினம் ஆனந்தராஜா**

(ஆனந்தி) யாழ். வைத்தீஸ்வர மாணவன்

1989-ம் ஆண்டு தேச விரோதக் கும்பலால் அழிக்கப்பட்ட எமது குல விளக்கு ஆனந்திக்கு எமது கண்ணீர் அஞ்சலி

44, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.

உன் பிரிவால் வாடும், அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா, தம்பிமார், தங்கை, பெறாமக்கள்.

(5010)

உ
ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்
14-12-1921

விண்ணில்
11-6-1992

யாழ்ப்பாணம் பெரியவிளான்
விஸ்வகர்ம குல வேந்தன்

அமரர் **அம்பலவாணர் சிவக்கொழுந்து**

திதி வைகாசிப் பூர்வ துவாதசி (1-6-1993)

11-6-1992-ல் விமானக் குண்டு தாக்குதலினால் இன்னுயிர் நீத்த ஓர் ஆண்டு நிறைவு.


## நினைவு கூருகின்றோம் ... 1993-06-01

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

★ **சீவரத்தினம் சச்சிதானந்தம்** (30 ஏக்கர் திருமலை)

மட்டு-களுவாஞ்சிக்குடி சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு காணாமல்போன தமிழ்ப்பொதுமகன்.

1986 ஆம் ஆண்டு யாழ்-கோட்டை முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 சிறுவர்கள், 2 பெண்கள்.

1987 ஆம் ஆண்டு கோப்பாய் பாலத்தடியில் பாரவண்டி ஒன்றின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டு-மயிலம்பாவெளிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப்.மனோ** (காத்தமுத்து சின்னராசா ஆரையம்பதி -மட்டு)

அம்பாறை - தம்பலவத்தைப்பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த.

**தீபன்** (சி குகநாதன்- சின்னவத்தை-அம்பாறை)

யாழ்-உரும்பராயில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**பாக்கியம் அக்கா** (பாக்கியம் கந்தையா-சிவன் வீதி, உரும்பராய்)

யாழ்-நல்லூரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**கதிரிப்பிள்ளை நடராசா** (மூத்தவிநாயகர்கோயில் வீதி, நல்லூர்-யாழ்)

1989 ஆம் ஆண்டு தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான பிரஜைகள் குழு பிரமுகர்,

**விஜயநாயகம் விஜயகுமார்** (தொண்டமானாறு)

யாழ்-ஏழாலை வடக்கில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான,

**திருமதி.சிவஞானபதி சிவசுப்பிரமணியம்** (ஏழாலை வடக்கு-யாழ்)

**திருமதி.செல்வராணி உருத்திரசிங்கம்.**

யாழ்-திருநெல்வேலி கலாசாலைச்சந்தியில் தேசவிரோதசக்திகளினால்சுட்டுக்கொல்லப்பட்டயாழ்-வைத்தீஸ்வராக்கல்லூரி மாணவன் நாட்டுப்பற்றாளரான.

**நாகரட்ணம் ஆனந்தராசா (ஆனந்)** (பாற்பண்ணை வீதி, நல்லூர் - யாழ். )

பருத்தித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டு - கிரான்குளிப் பகுதியில் தமது வீட்டில் குளித்துக் கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட தந்தை-மகன்.

1992ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு- செங்கலடிப்பகுதியில சிறிலங்கா இராணுவ அதிகாரியின் ஜீப் வண்டி மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் மகோதரன்/கிறிஸ்ரி** (இன்னாசி கிருபைராசா - கரடியனாறு – மட்டு )

மணலாறு - அளம்பில் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

**லெப். அருண்/பேணாட்** (அழகையா தங்கராசா - சந்தைவீதி, கோட்டைக்கல்லாறு - மட்டு. )

**2-ம் லெப். கோமளன்** (சபாரட்ணம் சுரேஷ்குமார் - 1-ம்கண்டம், பன்குளம் - திருமலை)

[illegible]

பெயரைச் சோத்தல் பொருட்டு மேன்முறையீடு செய்யலாம்.

2. இவ் வாக்காளர் பட்டியலில் ஏதேனும் ஒரு பெயர் காணப்படுவது பற்றிய தமது ஆட்சேபனையை தெரிவிக்கலாம்.

இவ் ஆட்சேபனைகளை 10. 06. 1993 க்கு முன்னர்

...யலாளர்" தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ...தடி விநாயகர் கோவிலடி, மானிப்பாய் என்ற முகவரிக்கு எழுத்துமூலம் அறிவிக்கும்படி இத்தால் கேட்கப்படுகின்றீர்கள்.

| நிவாரணக் கிளையின் பெயர் | அங்கத்தவர் பட்டியல் தயாரிக்கப்பட்ட கிளைகளின் பெயரும் முகவரியும் | | |
|---|---|---|---|
| 1. அ. சித்தன்கேணி, ஆ. தாவடி | கிளை | இல. 4 | விராங்கொடை |
| | ,, | 5 | பன்னாலை |
| | ,, | 6 | விழிசிட்டி |
| | ,, | 12 | மாவிட்டபுரம் |
| | ,, | 13 | அரசடி வீதி, மாவிட்டபுரம் |
| | ,, | 14 | கொல்லங்கலட்டி |
| | ,, | 35 | கலட்டி |
| | ,, | 41 | கிழானை |
| 2. அ. இணுவில் ஆ. சீரணி சந்தி | கிளை | இல. 10 | சீமெ தொழி முன்பாக |
| | ,, | 11 | நடேஸ்வராக்கல்லூரி அருகாமை, காங்கேசன்துறை |
| | ,, | 24 | மயிலிட்டி கரை காங். |
| | ,, | 27 | காங்கேசன்துறை |
| | ,, | 30 | தையிட்டி |
| | ,, | 31 | ஊறணி |
| | ,, | 38 | மாங்கொல்லை |
| | ,, | 42 | திருப்பூர் மயிலிட்டி |
| 3. அ. உடுவில், ஆலடி, நிவா, கிளை. ஆ. நீர்வேலி | கிளை | இல 09 | கீரிமலை கா கேசன்துறை |
| | ,, | 29 | வீமன்காமம் |
| | ,, | 33 | மடத்தடி |
| | ,, | 34 | தெல்லி அர வைத்தியசாலை அருகாமை. |
| | ,, | 36 | வசந்தபுரம் |
| 4. அ உரும்பராய் ஆ. மல்லாகம் | கிளை | இல. 15 | வறுத்தலைவிளான் |
| | ,, | 16 | கட்டுவன் |
| | ,, | 17 | குரும்பசிட்டி |
| | ,, | 37 | ஊரங்குணை கட்டுவன் |
| | ,, | 40 | குரும்பசிட்டி கிழக்கு |
| 5. அ. புத்தூர் ஆ. மாகியப்பிட்டி | கிளை | இல 21 | பலாலி மேற்கு |
| | ,, | 22 | பலாலி மத்தி |
| | ,, | 23 | பலாலி கிழக்கு |
| | ,, | 32 | பலாலி சந்தி |
| 6. அ. கந்தரோடை ஆ. கிளை. 02, துர்க்காபுரம் | கிளை | இல. 1 | தெல்லிப்பழை |
| | ,, | 2 | துர்க்காபுரம் |
| | ,, | 3 | வவுணாவத்தை |
| | ,, | 25 | மயிலிட்டி கிழக்கு |
| | ,, | 26 | மயிலிட்டி வடக்கு |
| | ,, | 28 | பளைவீமன்காமம் |
| 7. அ. தொட்டிலடி ஆ. கோண்டாவில் | கிளை | இல 7 | கருகம்பனை |
| | ,, | 8 | இளவாலை |
| | ,, | 43 | சீந்திபந்தல் |
| | ,, | 44 | மயிலங்கூடல் |
| 8. அ. நவக்கிரி ஆ. கட்டுடை | கிளை | இல. 18 | வசாவிளான் |
| | ,, | 19 | ஒட்டகப்புலம் |
| | ,, | 20 | வசாவிளான் சந்தி |
| | ,, | 39 | குட்டியப்புலம் |

(நா. தவநாதன்)
தலைவர்.

ஐ. சிங்கராசா
செயலாளர்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
மருதடி விநாயகர் அருகாமை, மானிப்பாய் (தற்காலிகம்)

(சி–6727) 01–06–1993

---



மண்ணில்

14-12-1921

விண்ணில்

11-6-1992

யாழ்ப்பாணம் பெரியவிளான்
விஸ்வகர்ம குல வேந்தன்

## அமரர் அம்பலவாணர் சிவக்கொழுந்து

திதி வைகாசிப் பூர்வ துவாதசி (1-6-1993)

11-6-1992-ல் விமானக் குண்டு தாக்குதலினால் இன்னுயிர் நீத்த ஓர் ஆண்டு நிறைவு.

நாமெல்லாம் ஏங்கிடவே மாமனும் மருமகனும்
விமானக் குண்டுக்கு இலக்கானீர்
எண்ணி எண்ணி ஏங்குகின்றோம் எம் வாழ்வில்
இனி இன்பம் காண்பது எப்போது ஐயா!
ஓராண்டு நிறைவு பெறும் இந் நாளில்
உமை எங்கே காண்போம் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்திக்காக எந் நாளும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தற்போதைய முகவரி
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

அன்புமனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(5007)


---

உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 — 03 — 1962



விண்ணில் 11 — 06 — 1992

யாழ்ப்பாணம பெரியவிளான் விஸ்வகர்ம குலசீலன்

அமரர்

## இரத்தினம் லோகநாதன்

[பெரியதம்பி]

திதி வைகாசிப் பூர்வ துவாதசி 01–06–1993

11-06-1992 இல் விமானக் குண்டுத் தாக்குதலினால் இன்னுயிர் நீத்த ஓர் ஆண்டு நிறைவு அஞ்சலி.

மலைபோலே நாமமைத்த மனக்கோட்டை சரிந்ததையா
ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமோ எமது துயர்
எம் உயிர் உள்ளவரை எம்முள்ளம் உறங்காது

அன்பு மனைவி, மழலைச் செல்வங்கள்,
பெற்றோர், உடன் பிறப்புகள், மைத்துனர்,
மைத்துனிமார், உறவினர், நண்பர்கள்.

தற்போதைய முகவரி:
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். (5006)

---

...வைத்தீஸ்வராக்கல்லூரி மாணவன் நாட்டுப்பற்றாளரான.

**நாகரட்ணம் ஆனந்தராசா (ஆனந்)** (பாற்பண்ணை வீதி, நல்லூர் - யாழ். )

பருத்தித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டு - கிரான்குளிப் பகுதியில் தமது வீட்டில் குளித்துக் கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட தந்தை-மகன்.

1992ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு- செங்கலடிப்பகுதியில சிறிலங்கா இராணுவ அதிகாரியின் ஜீப் வண்டி மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் மகோதரன்/கிறிஸ்ரி** (இன்னாசி கிருபைராசா - கரடியனாறு – மட்டு )

மணலாறு - அளம்பில் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

**லெப். அருண்/பேணாட்** (அழகையா தங்கராசா - சந்தைவீதி. கோட்டைக்கல்லாறு - மட்டு. )

**2-ம் லெப். கோமளன்** (சபாரட்ணம் சுரேஷ்குமார் - 1-ம்கண்டம், பன்குளம் - திருமலை)

**கிருஷ்ணமூர்த்தி** (சிவராசா பரமநாதன் - பெரிய குளம் வீதி, நெடுங்கேணி - மணலாறு)

**2–ம் லெப். மயூரன்/இடியாம்பி** (இராசலிங்கம் ஆனந்தராசா - 7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு)

**2–ம் லெப். தியாகு** (இராசையா சிவகுமார் - புதுக் குடியிருப்பு - முல்லைத்தீவு)

**அமுதன்** (சிவபாதம் அமுதன் - கணுக்கேணி, தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைததீவு)

**2–ம் லெப். அமிர்தலிங்கம்/வெலிங்டன்** (ஆனந்தராசா சிவபாலன் - முழங்காவில், நாச்சிக் குடா - மன்னார்)

**யேசுநேசன்** (பொன்னம்பலம் செந்தமிழ்ச்செல்வன்- மாந்தை - மன்னார்)

**2-ம் லெப். கதிரவேல்/கோபு** (ஈஸ்வரன் ராசன்- இராமனூர் புளியங்குளம் - வவுனியா)

**2–ம்லெப். அறிவொளி/கஜன்** (கதிரவேலு விக்கினேஸ்வரன் - 1-ம் ஒழுங்கை, கோயில்குளம்- வவுனியா)

**2-ம் லெப். விசுவாசம்** [ஜயம்பிள்ளை ஜெயக் குமார் - காந்திக்கிராமம், ஜகாணநகர்- கிளிநொச்சி]

**2-ம் லெப். கணேசன்/நிக்கலஸ்** [பாலச்சந்திரன் ரகுதாஸ் - அம்பாள்குளம், 2-ம் பகுதி கிளிநொச்சி]

**2-ம் லெப். கோயமூர்த்தி/வாணன்** [வெள்ளைக்கண்டு விஜயகுமார் - 7-ம் வாய்க்கால்- கிளிநொச்சி]

**2-ம் லெப். விஜிதரன்/விஜித்** (மகேந்திரன் கருணகுமார் - 5-ம் பண்ணை, கனகபுரம் - கிளிநொச்சி)

**லெப். பதுமன்/பியாப்** [வேலுப்பிள்ளை இராஜேந்திரன் - கவுடிபொலபோஸ்ட், மாலவகந்த- மாத்தளை - மலையகம்]

**இளங்குமணன்/தயாளன்** (இரவீந்திரநாதன் வேந்தன் - மயிலியதனை, தொண்டமானாறு- யாழ். )

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6726)

### சிந்தனைக்கு

பல்லாயிரம் பேர் கொண்ட சேனையைப் பார்ப்பது சுலபம். ஆனால், அதனைத் திறம்பட நடத்த வல்ல ஒரு சேனைத் தலைவனைக் காண்பது கடினம்.

- சீனப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## அரசாங்கமே பொறுப்பு

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 38 சிங்களப் பொலிஸாரும், ஓர் இராணுவச் சிப்பாயும் தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளனர். மூன்று வருட காலமாகத் தம்மை விடுவிக்க அரசாங்கம் எதுவித முயற்சியும் எடுக்காததைக் கண்டித்தே இந்நடவடிக்கையாகும்.

விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள சிங்களப் பொலிஸாரும் இராணுவச் சிப்பாயும் போர்க்கைதிகள். அவர்கள் யுத்தத்தின்போது பிடிக்கப்பட்டவர்கள். இவர்களை விடுதலை செய்வதென்பது பரஸ்பரம் கைதிகள் பரிமாற்றத்தின் அடிப்படையிலேயே நடைபெற வேண்டும். உலகில் வழமையான நடவடிக்கை இதுவே. இந்நிலையில், கைதிகள் பரிமாற்றத்திற்குத் தாம் தயாராக இருப்பதாக ஒரு வருடத்திற்கு முன்னரே புலிகள் அறிவித்து விட்டனர்.

இவர்கள் யுத்தக் கைதிகளாக இல்லாது விட்டால் இவர்களை விடுதலைப் புலிகள் இவ்வளவு காலம் தடுத்து வைத்திருக்க மாட்டார்கள் என்றே எண்ணலாம். ஏனெனில் வேறு வகையில் தமிழீழ பிரதேசத்திற்குள் பிரவேசித்த சிங்களவரைக் கைது செய்த விடுதலைப் புலிகள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்களைச் சிறிது கால இடைவெளியில் விடுதலை செய்துள்ளனர். இதற்கு பலதடவை சிங்கள மீனவர்களை புலிகள் விடுதலை செய்துள்ளமையே சான்றாகும்.

ஆனால், யுத்தக் கைதிகள் என்றபோதும், இவர்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மிகவும் மனிதாபிமானமான ரீதியிலேயே நடந்து கொண்டுள்ளனர். பல தடவை இவர்களின் விடுதலை குறித்து அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கென தமது நல்லபிப்பிராயத்தை வெளிக்காட்டியுமிருந்தனர்.

1992 / 93 ஆம் ஆண்டில் தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ணச் சமாதானக் குழுக்கள் வந்தபொழுதெல்லாம் விடுதலைப் புலிகள் இக்கைதிகள் குறித்து திறந்த மனத்துடனேயே பேசி

# ஊழியர் அக்கறையீனத்தால் நோயாளர் மரணிக்க கூடாது

## சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் அக்கறையீனத்தால் நோயாளர் ஒருவர் மரணமடைய நேரிட்டது என்ற குற்றச்சாட்டு இனிமேல் ஒருபோதும் எழக்கூடாது என்று சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் எச்சரித்துள்ளார்.

கொழும்பு பொது மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நரம்பியல் தீவிர கண்காணிப்பு பிரிவைத் திறந்து வைத்த பின்னர் அங்கிருந்த மருத்துவத்துறை பிரமுகர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது;

வைத்தியசாலை ஊழியர்களின் அக்கறையின்மையால் அண்மையில் ஒருவர் மரணமடைந்தமை பற்றி விசாரணை நடத்துமாறு உத்தரவு இடப்பட்டுள்ளது. வைத்தியசாலை ஊழியர்கள் நோயாளர்களைக் கவனிக்காமல் வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட தொலைக்காட்சியில் சிங்கள நாடகம் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் செய்திகள் வெளியாகி இருந்ததையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் வைத்தியசாலைகளிலுள்ள குறைபாடுகளையே எப்போதும் சுட்டிக்காட்டும் பத்திரிகைகள், வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் செய்யும் சிறப்பான சேவைகளைக் குறிப்பிட்டு பாராட்டுவதில்லை எனவும் அமைச்சர் குறைபட்டுக் கொண்டார்.

## வைத்தியசாலைவளாகத்தில் செய்தியாளர் மீது தாக்குதல்

### — பணிப்பாளர் மன்னிப்பு கோரினார்

[கொழும்பு]

கொழும்பு பெரியாஸ்பத்திரியின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் வைத்தியசாலை ஊழியர்களால் பத்திரிகையாளர் இருவர் தாக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

கடந்த சனியன்று இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி பூரண விசாரணை நடத்துமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஒலிவர் பெர்னாண்டோ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## பொலிசாரின் சித்திரவதை நீதிமன்றத்தில் விபரிப்பு

(கொழும்பு)

அந்தரங்க உறுப்பில் மிளகாய் நீரை ஊற்றினார்கள். ஷொப்பிங் பையில் பெற்றோல் ஊற்றி முகத்தில் கட்டினார்கள். எஸ்.லோன் பைப்பால் அடித்தார்கள். இவ்வாறு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான வழக்கு ஒன்றில் எதிரியாகக் குறிப்பிடப்பட்ட பெரிய நீலாவணையைச் சேர்ந்த வல்லிபுரம் குமாரகுலசிங்கம் தெரிவித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஷிராணி திலகவர்த்தனா முன்னிலையில் சட்டத்தரணிகளின் கேள்விக்கு பதிலளித்த அவர் பெரிய நீலாவணையைச் சேர்ந்ததான் மீன்பிடித்தொழிலைச் செய்து வந்ததாகவும், 10-05-1991 முதல் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்; குற்றஒப்புதல்வாக்குமூலத்தை பதிவு செய்ததாகக் கூறி இங்கு சாட்சியமளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே. எல்.எம். சரத் சந்திரவைஐந்து நிமிடங்களுக்கு முன்புவரை பார்த்ததில்லை எனவும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்றால் என்ன என்பது பற்றியே தனக்கு தெரியாது எனவும், வாக்குமூலம் அளிக்க விரும்புவதாகத்தான் பொலிசாரிடம் கூறவில்லை எனவும் தெரிவித்தார்.

இவரை உடனே வைத்தியர் முன்னிலையில் ஆஜர் செய்து வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிபதி உத்தரவிட்டதைத் தொடர்ந்து வழக்கு வரும் 10-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

### இடைநிறுத்தம்

[கொழும்பு]

வடக்கு. கிழக்கு மாகாணங்களில் சர்வோதய அமைப்பின் நடவடிக்கைகள் யாவும் நேற்று முன்தினம் முதல் நிறுத்தப்பட்டு விட்டதாக வவுனியாவில் சர்வோதய நிறுவனம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் மாவட்ட சர்வோதயா இணைப்பாளர்களுக்கு இதுபற்றி ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## தெளிவான கொள்கை சு. க விற்கு தேவை

### சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திரக்கட்சிக்குஇப்போது தேவைப்படுவது சிறந்த செயலாளரும், தெளிவான கொள்கைகளுமாகும் என மேல் மாகாண முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செய்தியில் அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அடுத்த தேர்தலில் வெற்றி ஈட்டுவதானால் தற்போதைய அரசாங்கத்திற்கு இருக்கும் பலவீனமான தலைமைத்துவம் கொள்கையின்மை என்பவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

## ராக்கிங்கை தடுக்க சட்டங்கள் வேண்டும்

(கொழும்பு)

செ நேரமன முறையில் ராக்கிங் மூலம் மேலும் பல மாணவ மாணவியர் பலியாவதற்கு முன்பாக இலங்கைப் பல்கலைக் கழகங்கள், மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் ராக்கிங்கை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக உபவேந்தர்கள், பீடாதிப்திகள், மாணவ ஆலோசகர்கள் எனப் பலதரப்பட்டோர் இதுபற்றி மேலும் கூறுகையில்; ராக்கிங் தற்போது பயங்கரவாதமாக உருமாறியுள்ளது என்றும், இதனைத் தடுக்க புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

## செயலக ஜெனரேற்றர் திருத்துவதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் உள்ள செயலிழந்த மின்பிறப்பாக்கியை மீண்டும் திருத்திஅமைப்பதற்கு அரசாங்க அதிபர் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

இந்த மின்பிறப்பாக்கியில் உள்ள ''பவபைக்'' எனப்படும் ஓர் உதிரிப்பாகம் பழுதடைந்த நிலையில் உள்ளதாகவும் இதனை கொழும்பு சென்ற சமயம் வாங்கிவர முயற்சித்தபோது அதனை வாங்குவதில் சில சிக்கல் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

இம்முறை தாம் கொழும்பு செல்லும்போது சம்பந்தப்பட்ட அந்த உதிரிப்பாகத்தை கழற்றி எடுத்துச் சென்று அது போன்ற உதிரிப்பாகத்தை வாங்க இருப்பதாகவும் தெரிவித்தார். இதேவேளை இந்த மின்பிறப்பாக்கி பாவனைக்கு ஏற்றதாக திருத்தி அமைக்கப்பட்டாலும் அது பிறப்பு அத்தாட்சி பத்திர அலுவலகத்திற்கும், அரசாங்க அதிபரின் அலுவலகத்திற்கும் மட்டுமே மின்னை வழங்க கூடியதாக இருக்கும் எனவும் செயலகத்தின் ஏனைய பகுதிகளுக்கும் மின்னை வழங்குவதானால் குறைந்தது 5 கிலோவாற் சக்தி கொண்ட மின்பிறப்பாக்கி தேவை எனவும் தற்போது இதை பெறுவதானால் பல உயர்அதிகாரிகளின் சிபாரிசினை பெறவேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## தொண்டர் வைத்திய சேவை இடைநிறுத்தப் பணிப்பு

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தொண்டர் வைத்தியராகப் பணியாற்றிய வைத்திய கலாநிதி க. மயிலேறும்பெருமாளைத் தொண்டர் வைத்தியசேவையை நேற்று முதல் நிறுத்தும்படி யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ்வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை மிக உச்சக்கட்டமாக இருப்பதாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபை பலத்த புகார்களைச் செய்துவருகின்ற போதும் தொண்டர் வைத்தியசேவைகளைப் புரிந்துவரும் இவ்வைத்திய கலாநிதியை சேவையை நிறுத்தும்படி பணித்திருப்பது நோயாளர்களுக்கு பலத்த இன்னல்களை ஏற்படுத்தும் என்று வைத்தியசாலை அபிவிருத்திச்சபை கவலை தெரிவித்திருக்கின்றது. (25)

### பணத்தட்டுப்பாடு நீக்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் நிலவி வந்த பணப் பற்றாக்குறை நீங்கியுள்ளது தற்போது வங்கி வாடிக்கையாளர்கள் கேட்கும் பணத் தொகையை எந்தவிதக்கட்டுப்பாடுமின்றி வழங்கி வருகின்றது முன்பு இவ்வங்கியில் வாடிக்கையாளர்களுக்கு பணம் வழங்குவதில் கட்டுப்பாடுகள் இருந்தமையால் வாடிக்கையாளர்கள் பலத்த கஷ்டங்களை அனுபவித்து வந்தனர் (25)

## ஜெயலலிதாவுக்கு பிரச்சினை ஏற்படுத்தமாட்டேன்

## அயோத்தி இடிக்கப்பட்டமைக்காக

காலம் தடுத்து வைத்திருக்க மாட்டார்கள் என்றே எண்ணலாம். ஏனெனில் வேறு வகையில் தமிழீழ பிரதேசத்திற்குள் பிரவேசித்த சிங்கள வரைக் கைது செய்த விடுதலைப் புலிகள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்களைச் சிறிது கால இடைவெளியில் விடுதலை செய்துள்ளனர். இதற்கு பலதடவை சிங்கள மீனவர்களை புலிகள் விடுதலை செய்துள்ளமையே சான்றாகும்.

ஆனால், யுத்தக் கைதிகள் என்றபோதும், இவர்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மிகவும் மனிதாபிமானமான ரீதியிலேயே நடந்து கொண்டுள்ளனர். பல தடவை இவர்களின் விடுதலை குறித்து அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கென தமது நல்லபிப்பிராயத்தை வெளிக்காட்டியுமிருந்தனர்.

1992 / 93 ஆம் ஆண்டில் தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ணச் சமாதானக் குழுக்கள் வந்தபொழுதெல்லாம் விடுதலைப் புலிகள் இக்கைதிகள் குறித்து திறந்த மனத்துடனேயே பேசியுள்ளனர். அத்தோடு நல்லெண்ணத் தூதுக்குழுவினர் சந்தித்துப் பேசுவதற்கும், அவர்களுடன் பிரார்த்தனை செய்யவும் அனுமதித்தனர்.

இந்நல்லெண்ண முயற்சியின் இறுதி நடவடிக்கையாக அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னான்டோ யாழ். வந்து திரும்பியபோது இரு போர்க்கைதிகளை விடுதலை செய்தனர் ஆனால், புலிகளின் இந்நல்லெண்ண சமிக்கைகளை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. இது குறித்துப் பேசமுற்பட்ட அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னான்டோவைக் கூட ஜனாதிபதி பிரேமதாசா சந்தித்துப் பேச விரும்பவில்லை.

இதேவேளை, போர்க்கைதிகளின் பெற்றோர்கள் யாழ். வந்து அவர்களைப் பார்வையிடுவதற்கு புலிகள் அனுமதியும் வழங்கியிருந்தனர். இவ்விடயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தீவிர முயற்சியில் இறங்கியது. முதலில் அதற்குச் சம்மதித்திருந்த அரசாங்கம் இறுதிவேளையில் அதற்கு மறுப்புத் தெரிவித்தது. பாதுகாப்புச் சூழ்நிலை காரணமாக அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தது. இவை இவ்விவகாரத்தில் அரசாங்கம் கொண்டுள்ள அசிரத்தையையும், அச்சத்தையும் காட்டுவதேயாகும்.

ஒருவகையில், அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேரம் பேசி கைதிகளை விடுதலை செய்வது, அரசாங்கத்திற்கு அவமானத்தை ஏற்படுத்தி விடும் எனக் கருதுவதுபோல் தெரிகின்றது. இதே வேளை கைதிகளின் பெற்றோர்களை வடக்கே செல்ல அனுமதிப்பதன் மூலம் அரசாங்கம் இது வரை தான் செய்து வந்த பொய்ப் பிரசாரங்கள் சிங்கள மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்பட்டு விடுமோ என அஞ்சுகின்றது. ஆனால், யதார்த்த பூர்வமான நிலையில் ஒரு 'கூலிப்பட்டாளத்தின்' மீது ஓர் அரசின் விசுவாசமும் இத்த அளவில்தான் இருக்கும் என்பதேயாகும்.

இந்த நிலையில், சிங்களக் கைதிகளின் விடுதலை என்பது விடுதலைப் புலிகளின் கைகளில் இல்லை என்பது வெளிப்படை. சிங்கள அரசிடமே அதற்கான முழுப் பொறுப்பும் உள்ளது. ஆகவே, இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமானால், சிங்கள மக்கள் அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்குதல் கொடுத்தாலே சாத்தியமாகும்,

---

மதி ஷிரானி திலகவர்த்தனா முன்னிலையில் சட்டத்தரணிகளின் கேள்விக்கு பதிலளித்த அவர் பெரிய நீலாவணையைச் சேர்ந்ததான் மீன்பிடித்தொழிலைச் செய்து வந்ததாகவும், 10-05-1991 முதல் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்; குற்றஒப்புதல்வாக்குமூலத்தை பதிவு செய்ததாகக் கூறி இங்கு சாட்சியமளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே. எல்.எம். சரத் சந்திரவைஐந்து நிமிடங்களுக்கு முன்புவரை பார்த்ததில்லை எனவும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்

வைக்கப்பட்டது.

# தெளிவான கொள்கை சு. க விற்கு தேவை

## சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திரக்கட்சிக்குஇப்போது தேவைப்படுவது சிறந்த செயலாளரும், தெளிவான கொள்கைகளுமாகும் என மேல் மாகாண முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செய்தியில் அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அடுத்த தேர்தலில் வெற்றி ஈட்டுவதானால் தற்போதைய அரசாங்கத்திற்கு இருக்கும் பலவீனமான தலைமைத்துவம் கொள்கையின்மை என்பவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

பட்டுள்ளது.

நிதி க. மயிலேறும்பெருமாளைத் தொண்டர் வைத்தியசேவையை நேற்று முதல் நிறுத்தும்படி யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ் வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை மிக உச்சக்கட்டமாக இருப்பதாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபை பலத்த புகார்களைச் செய்து வருகின்ற போதும் தொண்டர் வைத்தியசேவைகளைப் புரிந்து வரும் இவ் வைத்திய கலாநிதியை சேவையை நிறுத்தும்படி பணி

தெரிவித்திருக்கின்றது. (25)

## பணத்தட்டுப்பாடு நீக்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் நிலவி வந்த பணப் பற்றாக்குறை நீங்கியுள்ளது தற்போது வங்கி வாடிக்கையாளர்கள் கேட்கும் பணத் தொகையை எந்தவிதக்கட்டுப் பாடுமின்றி வழங்கி வருகின்றது முன்பு இவ்வங்கியில் வாடிக்கையாளர்களுக்கு பணம் வழங்குவதில் கட்டுப் பாடுகள் இருந்தமையால் வாடிக்கையாளர்கள் பலத்த கஷ்டங்களை அனுபவித்து வந்தனர் (25)

# ஜெயலலிதாவுக்கு பிரச்சினை ஏற்படுத்தமாட்டேன்

## புதிய ஆளுநர் தெரிவிப்பு

(ஜெய்ப்பூர்)

தமிழக அரசிற்கோ, முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கோ எந்தப்பிரச்சினையையும் எழுப்பும் நோக்கம் தமக்கு இல்லை என தமிழக ஆளுநராக இன்று பதவி ஏற்கவுள்ள டாக்டர் சென்னா ரெட்டி நேற்று தெரிவித்தார்.

இராஜஸ்தான் மாநிலத்தில் நேற்று அவருக்கு பல அமைப்புகள் நடத்திய பிரிவுபசார வைபவத்தில் சென்னா ரெட்டி பேசினார். இராஜஸ்தான் ஆளுநராக தாம் பதவி ஏற்ற போதும் இத்தகைய ஊகங்கங்கள் இருந்தன என்றும்ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாநில ஆளுநர் தெரிவுசெய்யப்பட்ட மாநில அரசின் அன்றாட அலுவல்களில் குறுக்கிட முடியாது. ஆனால் ஆலோசனை வழங்கலாம் என்று சென்னா ரெட்டி சுட்டிக்காட்டினார்.

சென்னா ரெட்டி இராஜஸ்தான் மாநில ஆளுநர் பொறுப்பிலிருந்து விலகி தமிழக ஆளுநராகபதவி ஏற்கும் பொருட்டு நேற்று காலை தலைநகர் ஜெய்ப்பூரிலிருந்து புறப்பட்டார். அவர் இன்று பிற்பகல் சென்னையில் தமிழக ஆளுநராக பதவி ஏற்பார்.

10 ஆண்டுகளில்

# யுத்தம் காரணமாக 15,00000 சிறுவர் மரணம்

(ஏதன்ஸ்)

கடந்த பத்தாண்டு காலத்தில் யுத்தங்கள் காரணமாக பதினைந்து லட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் மரணமடைய நேர்ந்திருப்பதாக யுனிசெப் நிறுவனம் கூறியுள்ளது. அத்துடன் நாற்பது லட்சம் குழந்தைகள் அங்கவீனம் அடைந்துள்ளன எனவும் அது தெரிவித்துள்ளது

யுனிசெப் நிறுவனத்தில் வருடாந்த மாநாடு ஏதன்ஸில் நடந்தபோது இவை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐம்பது லட்சம் குழந்தைகள் தமது சொந்த நாட்டிற்கு வெளியே அகதி முகாம்களில் வாழ்வதாகவும், ஒரு கோடியே இருபதுலட்சம் குழந்தைகள் சொந்த நாட்டிலேயே வீடுகளை இழந்து இருப்பதாகவும் அம் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது அத்துடன் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இருப்போரில் அரைவாசிக்கும்அதிகமானோர் பதினெட்டு வயதிற்கும் குறைவானவர்கள் ஆவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விபத்தில் சிக்கிய கடற்படை அதிகாரி பலி

(சென்னை)

செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் அருகே கார் ஒன்றும் தமிழக அரச பேருந்துக் கழக பேருந்து ஒன்றும் நேருக்குநேர் மோதிக் கொண்டதால் காரில் பயணம் செய்த கடற்படை அதிகாரி ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்தனர்.

இந்தக் கடற்படை அதிகாரி சென்னையிலிருந்து எர்ணாகுளம் நோக்கி சென்றுகொண்டிருந்தார் எனவும் கூறப்பட்டுள்ளது.

## அயோத்தி இடிக்கப்பட்டமைக்காக

# நாட்டு மக்களிடம் ராவ் மன்னிப்புக் கோர வேண்டும்

## மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங்

[டில்லி]

நடந்துவிட்ட தவறுகளுக்காக நாம் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும். அவ்வாறு செய்வது காங்கிரஸ் கட்சிக்கு ஒன்றும் புதிய சமாச்சாரமல்ல என்று மத்தியமனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் தெரிவித்தார்.

பீகார் மாநில தலைநகர் பாட்னாவில் ராஜ்பவனில் செய்தியாளர்களிடையே பேசிய அர்ஜுன் சிங் மேலும் கூறுகையில், அயோத்தி பள்ளி வாசல் இடிக்கப்பட்டமைக்காக பிரதமர் என்றவகையில் பி. வி. நரசிம்மராவ் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று தான் வலியுறுத்தப் போவதாகவும், உத்தரப் பிரதேச மாநிலத்தின் அமெதியில் நடைபெறவிருந்த காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இவ்விவகாரத்தையும் கிளப்ப இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும் இக்கூட்டம் கடும் காற்று காரணமாக மாநாட்டுப் பந்தல் சேதமடைந்தமையால் இறுதி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டது தெரிந்ததே.

அர்ஜுன் சிங் மேலும் கூறுகையில், சீனாவுடனான போருக்குப் பின்னர் ஜவஹர்லால் நேரு நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரினார். பாரிய ரயில் விபத்தையடுத்து லால் பகதூர் சாஸ்திரி பதவியைத் துறந்தார். அவசரகால சட்டத்தின் கீழ் ஆட்சி நடத்தியமைக்காகவும், அக்காலத்தில் நிகழ்ந்த அத்துமீறல்களுக்காகவும் இந்திராகாந்தி மன்னிப்புக் கோரினார். அந்த வகையில் அயோத்தி இடிக்கப்பட்டமைக்காக நரசிம்மராவ் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# இணக்கத் தீர்வுக்கு தயார்

(டில்லி)

அயோத்தி விவகாரம் தொடர்பாக இணக்கமான தீர்வு ஒன்றைக் காண தமது கட்சி தயாராக இருப்பதாகபாரதீய ஜனதாக் கட்சித் தலைவரான வாஜ்பாய் கூறியுள்ளார்.

விஜயவாடாவில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில், தமது கட்சி எந்தவொரு மதத்திற்கும் எதிரானது அல்ல என்றும் தெரிவித்தார்.

# வீரப்பன் குழுவை சேர்ந்த நால்வர் பொலிசாரால் கைது

[சென்னை]

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் குழுவைச் சேர்ந்த நான்குபேர் நேற்று முன்தினம் கர்நாடக மாநில சிறப்பு அதிரடிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருப்பதாக யு.என்.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும்; இவர்கள் நான்கு பேரும் தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகவும், இக்குழுவினருக்கு வேவு பார்த்துச் சொல்லும் வேறு சிலரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க எல்லைக் காவல் படையைச் சேர்ந்த இரண்டு அல்லது மூன்று அணிகள் வீரப்பனைத் தேடும் பணிக்காக சில தினங்களில் கர்நாடக மாநிலத்தை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராவின் விஜயத்திற்காக ஆவலுடன் காத்துள்ளோம்

## அமெரிக்க துணை அதிபர்

(வாஷிங்டன்)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தமது அமெரிக்கப் பயணத்தை விரைவில் மேற்கொள்வதையே கிளிங்டன் நிர்வாகம் விரும்புவதாக துணை அதிபர் ஆல்பர்ட் சோரே கூறியுள்ளார்.

வாஷிங்டனில் இந்தியத் தூதுவர் சித்தார்த்த சங்கரேயுடன் தொலைபேசியில் உரையாடிய துணை அதிபர் மேலும் கூறுகையில், இந்தப் பயணத்திற்கு முன்பாக அமெரிக்கா சில நிபந்தனைகளை விதிக்கக் கூடும் என்று இந்தியப் பத்திரிகைகள் சில வெளியிட்ட தகவல்களையும்மறுத்துரைத்தார்.

ஈழநாதம்

## ஆசிரியரைக் கடத்தினராம்

# ஐ. தே. க. எம். பிக்கு பத்து வருடச் சிறை

(கொழும்பு)

அநுராதபுரம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரைக் கடத்தியது, கொலை செய்யும் நோக்குடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது என்ற குற்றச் சாட்டுகளின் கீழாக விசாரணை நடாத்திய அநுராதபுரம் மேல் நீதிமன்றம் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருக்கு பத்து வருட கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மிகிந்தலை தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான தயாரத்னா வலகம்பாகு என்பவரே இவ்வாறு தண்டனை பெற்றவர் ஆவார்.

1985 ஜனவரி 2-ம் திகதியன்று அநுராதபுரம் மத்திய கல்லூரியை சேர்ந்த எஸ். குணபால விஜியசிங்க என்பவரைக் கடத்திச் சென்று கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் தயாரத்னா வலகம்பாகு ஐந்தாவது எதிரியாக குறிப்பிடப்பட்டிருந்தார். ஜூரர்கள் ஏகமனதாக எதிரிக்கு தண்டனை வழங்கப்படவேண்டுமென சிபார்சு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அலுவலக மாற்றம்

கூட்டுறவு அபிவிருத்திச் செயலகம் (பனம்பொருள்) 01-06-93 முதல் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 572ஆம் இலக்க கட்டிடத்தில் செயற்படும். 01-06-93-ம் திகதிய வாராந்தக் கூட்டம் இவ் அலுவலகத்திலேயே இடம்பெறவுள்ளது. யாழ். போதனா மருத்துவமனைக்கு முன்னுள்ள மலேரியாத் தடுப்பியக்க அலுவலகம் பிராந்தியச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு அருகில் இக் கட்டிடம் அமைந்துள்ளது.

திரு. தி. சபாரத்தினம்
(கூ. அ. உ. ஆணையாளர், ப. பொ.)
யாழ்ப்பாணம்.

(சி-6730)

சாவகச்சேரி
தெய்வேந்திரா திரை அரங்கில்
1-6-93 இன்று முதல்
முல்லை மாவட்டக் கலைஞர்களின்
முதலாவது வெற்றிப்படைப்பு
"தமிழோசை"
தினசரி மாலை 4 மணி 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்

## யாழ். மாவட்டத்தில்

உருவாகியுள்ளது. சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் சுமார் ஆறரை லட்சம் ரூபா ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது. இவ்வாறு செலவிடப்பட்ட பணத்தை பெறுவதற்காக வங்கிக்கு மக்கள் சென்று கேட்ட போதே இத்திட்டம் நிறுத்தப்பட்டது குறித்து தமக்கு அறிவிக்கப் பட்டிருப்பதாக கூறப்பட்டது.

இவ்விடயம் குறித்து யாழ். அரசாங்க அதிபர் நேற்றைய தினமே உதவி அரசாங்க அதிபர்களுக்கு சுற்று நிருபம் அனுப்பியுள்ளார். இச் சுற்று நிருபத்தின்படி இத்திட்டங்கள் அனைத்தும் நிறுத்தும்படி கோரப்பட்டுள்ளது.

எனினும் இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே செலவிடப்பட்ட லட்சக்கணக்கான ரூபாய்களைப் பெற்றுக்கொள்வது எப்படி என்று யாழ். செயலகத்தில் நேற்று மந்திராலோசனை நடத்தப்பட்டது. யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் மற்றும் செயலக கணக்காளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மிகவிரைவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பு செல்ல

## வங்கியாளர் பரீட்சை

இலங்கை வங்கியாளர் நிலையம் நடாத்தும் இடைநிலை, இறுதிப்பரீட்சைகளுக்கான பிரவேசப் பத்திரங்களும், மற்றைய ஆவணங்களும் கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இப்பரீட்சை 1993 ஜூன் மாதம் 05, 06, 12ஆம் திகதிகளில் யா/யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தங்கள் வங்கிப் பிரதேச அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பிரவேசப்பத்திரங்களைச் சேகரித்துக் கொள்ளுமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# புலிகளுக்கு உதவும் வகையில் மத்திய புலனாய்வுத்துறை

## -ஜெயலலிதா குற்றச்சாட்டு

விடுதலைப்புலிகள் தம்மை தீர்த்துக் கட்டுவதற்கு உதவும் வகையில் பொய்த் தகவல்களை சேகரித்து வருவதாக முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் குற்றஞ் சாட்டியுள்ளார். நேற்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடையே அவர் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் விவகாரத்தில் மாநில அரசு மெத்தனமாக இருப்பதாக மத்திய அமைச்சர் சவான் கூறியதை சுட்டிக்காட்டிய ஜெயலலிதா, விடுதலைப் புலிகளை நாட்டிலிருந்து அகற்ற தாம் உறுதி பூண்டிருக்கும் போது இப்படிக் கருத்து தெரிவிப்பது உற்சாகத்தை தரமாட்டாது. சக்தி வாய்ந்த விடுதலைப்புலிகளை தாம் உயிரையும் பொருட்படுத்தாது அடக்கி வருவதாகவும் கூறினார். இத்தகைய சூழ்நிலையில் மத்திய அரசு இப்படிகூறுவதால் விடுதலைப் புலிகளை எதிர்க்க எந்த தலைவருமே முன்வரமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய ஆளுநர் சென்னாரெட்டியை இன்று செவ்வாய் சந்தித்து மாநில நிலைமையை அவரிடம் தாம் விளக்கவுள்ளதாகக் கூறிய ஜெயலலிதா புதிய ஆளுநர் நியமனத்தில் மத்திய அரசு தன்னுடன் கலந்தாலோசிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

## பாடசாலைகளுக்கிடையே கரபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு திருநெல்வேலி பலாலி ஆசிரியர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் பாடசாலைகளுக்கான வெற்றிச் சுழற்சிக் கேடயம் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரால் வழங்கப்படவுள்ளது.

17வயதுப் பிரிவில் கனகரத்தினம் ம.ம வித்தியாலயத்தை எதிர்த்து சென்ஜோன்ஸ் கல்லூரி விளையாடவுள்ளது. வெற்றிபெறும் பாடசாலைக்கு லெப். கேணல் நீகன் நினைவு வெற்றிக் கேடயம் வழங்கப் படவுள்ளது

19வயதுப் பிரிவில் புனித சம்பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி விளையாடவுள்ளது. வெற்றி பெறும் பாடசாலைக்கு லெப். கேணல் ஜோய் நினைவு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படவுள்ளது

காட்சிப்போட்டியாக பலாலி ஆசிரியர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மாவட்ட ஆசிரியர் அணி விளையாடும்.

இப்போட்டி நிகழ்விற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைதியாகராஜா தலைமை தாங்குகிறார். பிரதம அதிதியாக பலாலி ஆசிரியர் கல்லூரி அதிபர் திரு. ஆர். எஸ். நடராஜா, சிறப்பு அதிதியாக தமிழீழவிடுதலைப் புலிகள் யாழ். மாவட்டத் தளபதி திரு. அன்பு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். திருமதி எஸ். நடராஜா பரிசில்களை வழங்குவார்.

## கொழும்பு

விடப் பிரதிநிதியாக கடந்த 18 மாதங்களாக கடமையாற்றிய திரு. ஜோன் போன்ஸ்வா இன்று தனது சேவையை முடித்துக்கொண்டுகொழும்புதிரும்புகிறார். இவர் தனது சேவைக் காலத்தின் போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆயுதக்

அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும், சாதாரண உடையில் பொலிசார் ரோந்து நடவடிக்

## குரங்கால் கடியுண்டார்

[யாழ்ப்பாணம்]

குரங்கிடம் தனது குறும்புத்தனத்தைக் காட்டிய சிறுவன் அக்குரங்கினால் கடியுண்டு காயமடைந்துள்ளான். சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ். புகையிரத நிலைய முகாமில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஜெ ஜெஸ்மன் என்ற சிறுவன் அப்பகுதிக்கு வந்த குரங்கு ஒன்றிடம் வாழைப்பழத்தை நீட்டினாராம். ஆத்திரமடைந்த குரங்கு சிறுவனைக் கடித்துக் காயப்படுத்தி விட்டு ஓடி மறைந்து விட்டது. இதனால் காலிலும், கையிலும் பலத்த காயமடைந்த நிலையில் அச் சிறுவன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டான்.

[22]

## படைத்தளபதி

யின் நடமாட்டம், அவர் இல்லத்திலிருந்து வெளியேறும்

## இலங்கை இளைஞர் நியூயோர்க்கில் கைது

### இந்தியரை கொலை செய்தாராம்

(கொழும்பு)

இந்திய இளைஞர் ஒருவரைக் கொலை செய்தார்என்ற குற்றச் சாட்டின் கீழ் இலங்கையர் ஒருவர் நியூயோர்க் நகர பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த முப்பத்தைந்து வயதான சந்திரநாதன் என்பவர், திருமணம் செய்யவிருந்த இந்திய இளைஞர் ஒருவரை சுட்டுக் கொன்றதாகக் கூறப்படுகின்றது. இதேவேளை கொலையுண்ட இந்திய வாலிபரின் காதலியும் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## குளிர்சாதனப் பெட்டிக்குள் இளைஞன் சடலம் மீட்பு

அம்பாந்தோட்டை அங்கமை என்ற பகுதியில் கடைக்காரர் ஒருவர் தனது குளிர்சாதனப் பெட்டியை காலையில் திறந்த போது அதனுள் ஓர் இளைஞனின் சடலம் காணப்பட்ட அதிர்ச்சிச்சம்பவம்ஒன்று நடைபெற்றுள்ளது. மேற்படி சடலம் குளிரூட்டும் பெட்டியில் மீன், இறைச்சிகளுக்கு நடுவே காணப்பட்டது.

இது கொலையா தற்கொலையா மற்றும் எப்படி கடைக் குளிர்சாதனப் பெட்டிக்குள் சடலம் வந்தது என்பது குறித்து பொலிசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து சம்பந்தர்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், மண்டைதீவு பிள்ளையார் கோவிலடி தேநீர் கடை உரிமையாளருமாகிய வைரமுத்து சம்பந்தர் காலமானார். இவர் வைரமுத்து நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், செல்லாச்சியின் அன்புக் கணவரும், தருமராசா, இராஜேஸ்வரி, சந்தானலட்சுமி, சகுந்தலாதேவி, சத்தியசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நடராஜா, மகேந்திரன், விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், இராமநாதன், சண்முகதாஸ் அன்னபாக்கியம், சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக (1-6-93) இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய்

சாவகச்சேரி

# தெய்வேந்திரா திரை அரங்கில்

**1-6-93 இன்று முதல்**

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

**முதலாவது வெற்றிப்படைப்பு**

# "தமிழோசை"

தினசரி மாலை 4 மணி 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10-30, மாலை 4 மணி, 6 மணி

(சி/6720)

உ

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்கள கரமான ஸ்ரீமுக வருஷம் வைகாசிப் புதன் 20 ஆம் நாள் (02. 06 93) புதன்கிழமை காலை 5. 52 மணிமுதல் 7. 52 மணிவரை வரும் சுபமுகூர்த்த சுபவேளையில்,

★ வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் (நாச்சிமார் கோவில்) ஆலயத்தில்,

| எமது திருநிறைச் செல்வன் **சுதாகரன்** [சுதா] அவர்களுக்கும் | திருநிறைச் செல்வி **ஜெயக்குமாரி** [ஜெயா] அவர்களுக்கும் |
|---|---|

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நடைபெறவிருக்கும் வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

« இரு வீட்டார் அழைப்பு »

வரவேற்பு உபசாரம்

**மணமகன் இல்லத்தில்**
02. 06. 93 மாலை 3. 00 மணி
தொடக்கம் 5. 00 மணிவரை

**மணமகள் இல்லத்தில்**
02 06 93 மாலை 5 30 மணி
தொடக்கம் இரவு 7. 30 மணிவரை

**திரு. இ. பத்மநாதன் குடும்பத்தினர்**
(தந்தை)
601, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**திரு, திருமதி சரவணமுத்து**
**கந்தசாமிப் பத்தர் குடும்பத்தினர்**
947, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.
குறிப்பு:- தற்காலிக மணமகள் இல்லம்
620, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(நாச்சிமார்கோவில் முன்பாக)

(4986)

அரசாங்க அதிபர் நேற்றைய தினமே உதவி அரசாங்க அதிபர்களுக்கு சுற்று நிருபம் அனுப்பியுள்ளார். இச் சுற்று நிருபத்தின்படி இத்திட்டங்கள் அனைத்தும் நிறுத்தும்படி கோரப்பட்டுள்ளது.

எனினும் இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே செலவிடப்பட்ட லட்சக்கணக்கான ரூபாய்களைப் பெற்றுக்கொள்வது எப்படி என்று யாழ். செயலகத்தில் நேற்று மந்திராலோசனை நடத்தப்பட்டது. யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் மற்றும் செயலக கணக்காளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மிகவிரைவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பு செல்லவுள்ளார். கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி இப்பிரச்சினைக்கு தீர்வு காணமுயற்சிப்பார் என்று தெரியவருகிறது.

பெறும் பாடசாலைக்கு லெப்.

## கொழும்பு

விடப் பிரதிநிதியாக கடந்த 18 மாதங்களாக கடமையாற்றிய திரு. ஜோன் போன்ஸ்வா இன்று தனது சேவையை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்புகிறார். இவர் தனது சேவைக் காலத்தின் போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆயுதக்

அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும், சாதாரண உடையில் பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு கூறியிருப்பதுடன் சந்தேக நபர்கள் குறித்த தகவல்களை அளிக்கும்படியும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பயங்கர

வேண்டும் என்றும் கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

நாட்டின் பொருளாதாரம் வெளிநாட்டு உதவியில் தங்கியிருப்பதைத் தவிர்க்கவே தற்போது ஏற்றுமதி நடவடிக்கைக்குமுன்னுரிமைஅளிக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

குரங்கிடம் தனது குறும்புத்தனத்தைக் காட்டிய சிறுவன் அக்குரங்கினால் கடியுண்டு காயமடைந்துள்ளான். சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ். புகையிரத நிலைய முகாமில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஜெ ஜெஸ்மன் என்ற சிறுவன் அப்பகுதிக்கு வந்த குரங்கு ஒன்றிடம் வாழைப்பழத்தை நீட்டினாராம். ஆத்திரமடைந்த குரங்கு சிறுவனைக் கடித்துக் காயப்படுத்தி விட்டு ஓடி மறைந்து விட்டது. இதனால் காலிலும், கையிலும் பலத்த காயமடைந்த நிலையில் அச் சிறுவன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டான். [22]

## படைத்தளபதி

யின் நடமாட்டம், அவர் இல்லத்திலிருந்து வெளியேறும் நேரம், திரும்பும் நேரம், செல்லும்பாதை, வாகனம் போன்ற விபரங்கள் இந்த சிப்பாயிடம் விசாரிக்கப்பட்டதாம். சிப்பாய் பந்துல கடந்த சனியன்று வேலை முடிந்து சென்று கொண்டிருக்கையில் அருகிலுள்ள தும்முல்லசந்தியில் வைத்து கடத்திச்செல்லப்பட்டார்.

15 நிமிடங்களின்பின் ஜீப் ஒரு பங்களாவினுள் நுழைந்தது. அங்கு இந்த சிப்பாய் 3 நாள் வைக்கப்பட்டு பின் கண்களைக் கட்டி செவ்வாயன்று திவுலப்பிட்டி சந்தி அருகில் இனந்தெரியாத நபர்களால் இறக்கிவிடப்பட்டார்.

# SCIENCE COLLEGE

## விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோவில் அருகாமை,
யாழ்ப்பாணம்.

**95 A/L**

ஆரம்பம்: 3-06-93 வியாழன் 4-30 p. m.

தூய பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம், B. Sc. (Hons.)

விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன், B.Sc (Cey.) Dip in Ed.

★ 95 A/L ஆரம்பத்தில் இருந்து அனுமதி வழங்கப்படும்.

★ 94 A/L புதிய விலங்கியல் வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

★ 93 A/L Zoology Model Question Paper Class ஆரம்பமாக உள்ளது.

★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறலாம்.

(சி-6729) —நிர்வாகி

அதிர்ச்சிச்சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. மேற்படி சடலம் குளிரூட்டும் பெட்டியில் ... பது குறித்து பொலிசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து சம்பந்தர்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், மண்டைதீவு பிள்ளையார் கோவிலடி தேநீர் கடை உரிமையாளருமாகிய வைரமுத்து சம்பந்தர் காலமானார். இவர் வைரமுத்து நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், செல்லாச்சியின் அன்புக் கணவரும், தருமராசா, இராஜேஸ்வரி, சந்தானலட்சுமி, சகுந்தலாதேவி, சத்தியசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நடராஜா, மகேந்திரன், விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், இராமநாதன், சண்முகதாஸ் அன்னபாக்கியம், சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார். அன்னாரின பூதவுடல் ஈமக்கிரியைக்காக (1-6-93) இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ச. தருமராசா (ராசா)

(5014)



செல்வன்

## சண்முகநாதன் கிரிதரன்

(சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன் - A/L 95)

"கயிலை வாசா" மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட சண்முகநாதன் கிரிதரன் 31-05-93 அன்று அகால மரணமானார். இவர் சண்முகநாதன் தங்கமணியின் அன்பு மகனும், ரசந்தினியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆ. கைலாயபிள்ளை-திருப்பதியம், வே. மகாலிங்கம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமச் சடங்குகள் அவரது இல்லத்தில் செவ்வாய் (இன்று) காலை 10-00 மணிக்கு நடைபெற்று மட்டுவில் தெற்கு நெனியன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சண்முகநாதன்
(தந்தை)

(5013)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.